பாடம் - 11

الدرس الحادي عشر

## உஹதுப் போர்

## معركة أحد

பத்ரு போர் நடந்து ஓராண்டிற்குப் பிறகு முஸ்லிம்களுக்கும் மக்காவின் இறைநிராகரிப்பாளர்களுக்கும் இடையே இந்தப் போர் நடந்தது. எவ்வாறெனில் இணைவைப்பாளர்கள் பத்ரு போரில் தோற்ற பிறகு முஸ்லிம்களைப் பழிவாங்க வேண்டும் என உறுதி கொண்டு மூவாயிரம் போர் வீரர்களுடன் புறப்பட்டனர். முஸ்லிம்கள் சுமார் 700 பேருடன் சென்று அவர்களை எதிர்கொண்டனர். நிராகரிப்பாளர்களை முஸ்லிம்கள் ஆரம்பத்தில் வென்றார்கள். அவர்கள் மக்காவை நோக்கி விரண்டோடினார்கள்தான். ஆயினும் இணைவைப்பாளர்கள் விரண்டோடியதைக் கண்ட அம்பு எய்தும் வீரர்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வகுத்துக் கொடுத்த திட்டத்தை அம்பு எய்தும் வீரர்கள் குலைத்து போரில் கிடைக்கும் பொருட்களைச் சேகரிப்பதற்காக அவர்கள் மலையை விட்டு கீழே இறங்கி வந்ததால் அந்த மலை வழியாக எதிரிகள் மீண்டும் திரும்பி வந்து முஸ்லிம்களை வீழ்த்தினார்கள். இதனால் இந்தப் போரில் இணைவைப் பாளர்களின் கை ஓங்கியது.

### அகழ் போர்

உஹது போருக்குப் பிறகு யூதர்களில் சிலர் மக்காவாசிகளிடம் சென்று மதீனாவிலுள்ள முஸ்லிம்கள் மீது போர் தொடுக்குமாறு அவர்களைத் தூண்டினர். அவர்களுக்கு உதவி செய்வதாகவும் வாக்களித்தனர். அதை மக்காவாசிகளும் ஏற்றுக்கொண்டனர். பிறகு யூதர்கள் வேறு பல குலங்களையும் முஸ்லிம்களுக் கெதிராகப் போர் செய்யுமாறு தூண்டினர். அவர்களும் சம்மதம் தெரிவித்தனர். இவ்வாறாக எல்லா இடங்களிலிருந்தும் இணைவைப்பவர்கள் மதீனாவை முன்னோக்கி வந்தனர். இறுதியாக மதீனாவைச் சுற்றி சுமார் பத்தாயிரம் போர் வீரர்கள் ஒன்று திரண்டனர்.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் எதிரிகளின் நடவடிக்கைகளை அறிந்துதம் தோழர்களிடம் கலந்தாலோசித்தார்கள். அப்போது ஸல்மான் ஃபாரிஸி(ரலி) அவர்கள் மதீனாவைச் சுற்றி மலைகளில்லாத பகுதிகளில் அகழ் தோண்டுமாறு ஆலோசனை கூறினார்கள். அகழ் தோண்டுவதில் எல்லா முஸ்லிம்களும் பங்கு கொண்டு விரைவாகத் தோண்டி முடித்தார்கள்.

இணைவைப்பவர்கள் அகழைக் கடக்க முடியாமல் சுமார் ஒரு மாத காலமாக மதினாவுக்கு வெளியே முகாமிட்டனர். பின்னர் இணைவைப்பவர்களின் மீது ஒரு பயங்கரமான காற்றை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அது அவர்களின் கூடாரங்களைப் பெயர்த்தெறிந்தது. அவர்களுக்குப் பீதி ஏற்பட்டு விரைவாக ஊருக்குத் திரும்பிவிட்டனர். இவ்வாறாக அல்லாஹ் மட்டும் தன்னந் தனியாக அந்த கூட்டுப்படையினரைத் தோற்கடித்து முஸ்லிம்களுக்குப் பேருதவி புரிந்தான்.

### மக்காவை வெற்றி கொள்ளுதல்

ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மக்காவின் மீது படையெடுக்கவும் அதை வெற்றிகொள்ளவும் திட்டமிட்டார்கள். ரமலான் 10 ஆம் நாள் பத்தாயிரம் படைவீரர்களுடன் புறப்பட்டுச் சென்றார்கள். சொல்லிக் கொள்ளும்படியான மோதல்கள் எதுவுமின்றி மக்காவினுள் நுழைந்தார்கள். குறைஷிகள் சரணடைந்தார்கள். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு உதவி செய்தான். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஹரம் ஷரீஃப் எனும் புனிதப் பள்ளிவாசலுக்குச் சென்று கஅபா ஆலயத்தை வலம் வந்து அதனுள் இரண்டு ரக்அத் தொழுதார்கள். அதன் பின்னர் கஅபா ஆலயத்தின் உள்ளும் அதன் மேல் பகுதியிலும் இருந்த சிலைகள் அனைத்தையும் உடைத்தெறிந்தார்கள்.

பிறகு நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் கஅபாவின் வாசலின் மீது நின்றார்கள். குறைஷிகள் கீழே அணிவகுத்திருந்தார்கள். தங்களை நபிகள் நாயகம் என்ன செய்யப் போகிறார்களோ என எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள், 'குறைஷிகளே! நான் உங்களை என்ன செய்ய வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?' எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'நீங்கள் சிறந்த சகோதரர்! சிறந்த சகோதரனின் மகன்! நல்லதையே செய்வீர்கள்!' எனக் கூறினார்கள். உடனே நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள், 'செல்லுங்கள்! நீங்கள் அனைவரும் விடுதலை பெற்றவர்கள்' எனக் கூறினார்கள். தமது தோழர்களைக் கொடுமைப்படுத்தி, கொலையும் செய்து, தமக்கும் தொல்லைகள் கொடுத்து, நாட்டை விட்டே தம்மை வெளியேற்றிய தம் விரோதிகளை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னித்ததில் மிகப்பெரிய முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள்.

மக்கா வெற்றிக்குப் பின்னர் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் இணைந்தனர். ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டு நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் ஹஜ் செய்தார்கள். அதுதான் அவர்கள் செய்த ஒரே ஹஜ். அவர்களுடன் லட்சத்திற்கும் அதிகமானோர் ஹஜ் செய்தனர். ஹஜ்ஜை நிறைவு செய்த பின் நபிகள் நாயகம் மதீனாவுக்குத் திரும்பினார்கள்.